# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1919 - 2015 ජූනි මස 12 වැනි සිකුරාදා - 2015.06.12

*1919 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 890 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 912 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2015, யூலை மாதம் 3 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மடு | இரணை இலுப்பைக்குளம் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மடு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |
| மன்னார் | மாந்தை மேற்கு | மாந்தை வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மாந்தை மேற்குப் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

6-314

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | சம்மாந்துறை | மல்லிகைத்தீவு பிரிவின் பொது விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |

6-317

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | களனி | தலுகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் சியனா கோரளை மேற்குப் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

6-316

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணபங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொள்ளுப்பிட்டி பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு |

6-315

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 26.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | கல்முனை | அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |

6-421

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி – கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆடி மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | பியகம | சியனே கோரளை மேற்குப் பிரிவில் மல்வான - யட்டிஹேன பகுதி முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

6-418

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி – கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆடி மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பிரிவில் புதுக்கடைப் பகுதி முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 5 |

6-420

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | நானாட்டான் | நானாட்டான் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

6-367

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*2015, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிய 1912 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை பகுதி கரைவாகுபற்று பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரல் அறிவித்தலினை இரத்துச் செய்தல்*

மேற்படி பதவிக்காக 2015.04.24 ஆந் திகதிய 1912 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. பிரசுரிக்கப்பட்ட அவ்வர்த்தமானி அறிவித்தலினை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 27.

6-419

---

## அரச சேவை ஆணைக்குழு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்திற்கான வெற்றிடங்கள்

கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்தில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

| திகதி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| 2012.07.01 | 35 |
| 2013.01.01 | 2 |
| 2013.07.01 | 3 |
| 2014.01.01 | 1 |
| 2014.07.01 | 3 |
| மொத்தம் | 44 |

2. இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015, ஆடி மாதம் 8 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு ''செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவம் அடங்கியுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்திற்கான வெற்றிடம்'' எனவும், தான் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் கல்வியியற் கல்லூரி அல்லது ஆசிரிய பயிற்சிக் கல்லூரியையும் குறிப்பிடுதல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பப்படிவங்களைத் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட தினத்திற்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

3.1 தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அச்சேவையின் நியமனங்களுக்கு உரிய சாதாரண நிபந்தனைகளுக்கும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணங் களில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனை களுக்கும் மேலும் அவைகளுக்கு ஏற்புடையதாக காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற திருத்தங்கள், தாபன விதிக் கோவை, நிதிப்பிரமாணங்கள் ஆகியவற்றுக்கும் மற்றும் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச சேவை ஆணைக்குழு வின் விதிமுறைகளுக்கும் ஏற்புடையதாக இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-I தரத்துக்கு நியமிக்கப்படுவர்.

3.2 பதவிக்காகத் தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் சேவையின் தேவை அடிப்படையில் எந்த கல்வியியற் கல்லூரியிலும் அல்லது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் சேவை புரியக் கட்டுப்பட்டுள்ளனர்.

3.3. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்கு உரியதான பொது நிபந்தனைகளின் பால் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**4. சாதாரண தகைமைகள் :**

4.1 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணத்தின் 17 ஆவது பிரிவின்படி பட்டம் பெற்றிருப்பது ஆங்கில மொழி மூலம் அல்லவெனில் பதவியுயர்வுக்கு தகைமை பெறும் பொருட்டு க. பொ. த. (சா. தரம்) அல்லது சாதாரண பரீட்சை ஒன்றில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்காக திறமைச் சித்தியொன்றோ அல்லது அதனைவிட மேலான சான்றிதழொன்றையோ பெற்றிருத்தல் அவசியமாகும்.

**5. கல்வி மற்றும் வேறு தகைமைகள் :**

5.1 ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆவது வகுப்பின் II ஆம் தரத்தின்கீழ் (ஆவணப்படுத்தப்பட்ட) பதவியொன்றில் ஐந்து வருடத்துக்குக் குறையாத திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்து பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பதோடு இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II தரத்துக்குக்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டலில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

5.2 கல்வி முகாமைத்துவம் பற்றிய பட்டம் அல்லது பட்டப்படிப்பு டிப்ளோமாவுடன் கீழ்க்குறிப்பிடப்படும் கலை மற்றும் தொழிற் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் :

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கல்வியியல் பற்றி முதல் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் (மேற்பிரிவு) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது கல்வியியல் தொடர்பாக உயர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உரிய பாடத்துறை தொடர்பாக பட்டமொன்றைப் பெற்றிருப்பதோடு விசேட அல்லது திறமைச் சித்தியுடன் பட்ட மேற்படிப்பு கல்வி டிப்ளோமா ஒன்றையோ அல்லது உரிய பாடத்துறையில் பட்ட மேற்பட்டமொன்றையோ பெற்றிருத்தல் ;

அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு கல்வி டிப்ளோமா ஒன்றையோ அல்லது உரிய பாடத்துறையில் அல்லது கல்வியியல் தொடர்பாக பட்ட மேற்பட்டமொன்றையோ பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்ள வேண்டியது**.- குறித்த திகதிக்கு (1995.01.01) கல்வியியற் கல்லூரியொன்றில் நிரந்தர விரிவுரையாளராகவோ, உதவி விரிவுரையாளராகவோ ஐந்து (5) வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள 45 வயதை அண்மித்துள்ளவர்கள் மேலுள்ள 5.2 ஆம் பந்தியில் கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டமோ அல்லது பட்ட மேற்படிப்பு டிப்ளோமாவொன்றோ இருத்தல் வேண்டும் என்பதிலிருந்து மாத்திரம் விலக்களிக்கப்படுவர்.

**6. சம்பளத் திட்டம் :**

6.1 அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன்படி SL 1-2006 சம்பள வகுதியின் கீழான ரூ. 22,935-10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும்.

**7. தெரிவுசெய்யும் முறை :**

7.1 அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் அந்த ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளித் திட்டங்களுக்கேற்ப நடாத்தப்படும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

7.2 நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

7.2.1 பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (உதவி பெறும் பாடசாலைகளுக்குச் சேர்க்கும் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழோ, சமயத் தீட்சைச் சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.);

7.2.2 பட்டச் சான்றிதழ் மற்றும் கல்வித் தகைமைகள் தொடர்பான ஏனைய சான்றிதழ்கள்;

7.2.3 தொழில் தகைமை பற்றிய சான்றிதழ்கள்;

7.2.4 சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழி அறிவு தொடர்பாகப் பெற்றுள்ள மிக உயர் சான்றிதழ்கள்.

7.3 சகல வெற்றிடங்களையும் நிரப்புவதோ அல்லது ஒரு தொகையை நிரப்புவதோ அல்லது நிரப்பாது இருப்பதோ அரச சேவை ஆணைக்குழுவுக்குரிய உரிமையாகும்.

7.4 ஒவ்வொரு வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிக்கும் முன்னைய ஐந்து வருட சேவைக்காலத்தினுள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படாது சகல சம்பள ஏற்றங்களையும் பெற்று திருப்திகரமான சேவைக்காலமொன்றைப் பூர்த்திசெய்திருத்தல்.

7.5 நேர்முகப் பரீட்சையின் போது தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

7.6 வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 4 மற்றும் 5 இன்கீழ் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களினதும் பிறப்புச் சான்றிதழினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

உபாலி மாரசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
2015, வைகாசி 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-I ஆம் தரத்திற்கான வெற்றிடங்கள்**

(ஏ4 அளவுள்ள தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தும் வகையில் விண்ணப்பப்படிவத்தை தயார் செய்துகொள்ள வேண்டும்.)

(i) விண்ணப்பிக்கும் பதவி :----.
(ii) உரிய கல்வியியற் கல்லூரி :----.
(iii) மொழி மூலம் :----.
(iv) 2-I : தரத்துக்கு விண்ணப்பிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலின் 5 இன்கீழ் தகைமை பெறும் விடய இலக்கம் :----.

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :
வண./திரு./திருமதி/செல்வி :----.
Rev./ Mr./ Mrs/Miss (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
(iii) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பிறந்த திகதி :----.
(ii) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

4. குடியுரிமை பற்றி :
(i) பரம்பரையா/பதிவுசெய்யப்படல் மூலமா ? :----.
(ii) தற்போதைய பதவி மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதி : ----.

5. நீங்கள் சார்ந்திருக்கும் தேசிய இனம் வகை :
(சிங்களவர் - 1, தமிழர்-2, வேறு-3)
☐ (இலக்கமிடுக)

6. (i) முதல் நியமனத் திகதியும் பதவியும் :----.
(ii) தற்போதைய பதவியும் அதற்கு நியமிக்கப்பட்ட திகதியும் : ----.
(iii) தற்போது சேவை புரியும் இடம் :----.
(iv) ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II ஆம் தரத்தில் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தி/சித்தியின்மை பற்றியும் சித்தியடைந்திருப்பின் செல்லுபடியாகும் திகதியும் :----.

7. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் பற்றிய விபரம் :

(i) முதல் பட்டம் :

| பட்டத்தின் பெயரும் வழங்கிய நிறுவனமும் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ii) பட்ட மேற்பட்டம் :

| சான்றிதழின் பெயர்/ வழங்கிய நிறுவனம் | ஆண்டு | வகுப்பு | விசேட/ திறமை/ சாதாரணம் என்பது பற்றி |
|---|---|---|---|
| | | | |

(iii) கல்வி டிப்ளோமா :

| சான்றிதழின் பெயர்/ வழங்கிய நிறுவனம் | பாடநெறிக் கான காலம் | விசேட/ திறமை சித்தி பற்றி | பாடங்கள் பற்றிய விபரம் |
|---|---|---|---|
| | | | |

(iv) வேறு தொழிற் தகைமைகள் (டிப்ளோமா சான்றிதழ் மற்றும் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் பற்றிய விபரம்) :

| சான்றிதழின் பெயர்/ வழங்கிய நிறுவனம் | பாடநெறிக்கான காலம் | பாடங்கள் பற்றிய விபரம் |
|---|---|---|
| | | |

(v) ஆங்கில மொழி பற்றிய தேர்ச்சி :

| க. பொ. த. (சா. தரம்) | சாதாரணம்/ திறமை/ விசேடம் | பெறுபேறு செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |

| ஆங்கில பாடத்துக்கு உரியதாகப் பெற்றுள்ள வேறு சான்றிதழ்கள் | வழங்கிய நிறுவனம் மற்றும் செல்லுபடியாகும் திகதி | தரம் |
|---|---|---|
| | | |

8. ஏதாவது தவறொன்றிற்காக நீதிமன்றத்தில் நீர் குற்றவாளியாக ஆக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்) : ----.

9. தற்போது உமக்கு எதிராக திணைக்கள ஒழுக்காற்றுப் விசாரணை இடம்பெறுகிறதா ? இல்லையாயின் நீதிமன்றில் வழக்கொன்று விசாரிக்கப்படுகின்றதா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்.) :----.

10. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இங்குள்ள தகவல்கள் ஏதாவது உண்மைக்குப் புறம்பானவை எனவோ பிழையானவை எனவோ வெளிப்படின் அதன் பிரகாரம் நான் இப்பதவியைப் பெறுவதற்குத் தகைமையற்றவன் ஆவேன் என்பதையும் பதவி உயர்வு பெற்ற பின் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது உண்மைக்குப் புறம்பானவை எனவோ பிழையானவை எனவோ வெளிப்படின் நான் எந்த நட்டஈடும் பெறாமல் பதவியில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் அறிவிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் உறுதியுரை**

.................................................. இன் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் இந்நிறுவனத்தில் ............................................. ஆக சேவை புரிகிறார் எனவும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

----,
நிறுவனத் தலைவர் அல்லது தலைவருக்காக அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

நிறுவனம் :----.
திகதி :----.

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களை 2-I ஆம் தரத்துக்கு உயர்த்தும் புள்ளித்திட்டம்**

புள்ளிகள் வழங்குவதற்காக உரிய தகைமைகள் வெற்றிடம் ஏற்பட்ட திகதிக்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

1. சேவை அனுபவம் — உச்ச புள்ளிகள் 50
இ. ஆ. க. சே. 2-II ஆம் தரத்தில் 5 வருடங்களுக்கு மேல் மேலதிக தொடர்ச்சியான சேவைக்காலத்துக்காக ஒரு வருடத்துக்கு 10 புள்ளிகள் வீதம் 5 வருடங்களுக்கான உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.

2. மேலதிக கல்வித் தகைமைகள் — உச்ச புள்ளிகள் 20
இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் 2-I இற்கு விண்ணப்பிக்கத் தேவையான கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக உள்ள தகைமைகளுக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 2.1 பட்டம் | 05 |
| 2.2 பட்ட மேற்படிப்பு டிப்ளோமா | 10 |
| 2.3 பட்ட மேற்படிப்பு | 15 |
| 2.4 கலாநிதிப் பட்டம் | 20 |

3. கலைசார் செயற்சாதனைகள் — உச்ச புள்ளிகள் 10
பட்டம், பட்ட மேற்படிப்பு டிப்ளோமா அல்லது பட்ட மேற்பட்டம் சமர்ப்பிக்கும் ஆவணங்களுக்காக புள்ளிகள் வழங்கப்படாததுடன் ஒரு வெளியீட்டுக்காகவும் ஒரு ஆய்வுக்காகவும் மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.

3.1 ஆய்வு

| | |
|---|---|
| 3.1.1 முறையாகத் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை (இறுதி அறிக்கை) | 02 |
| 3.1.2 தொழிற்துறைக்கு உரிய ஆய்வாக இருப்பது | 01 |
| 3.1.3 பகிரங்க ஆய்வு கலந்துரையாடல் மன்றத்துக்குச் சமர்ப்பித்திருத்தல் | 02 |

3.2 வெளியீடு

| | |
|---|---|
| 3.2.1 இணைப்பாட விதான வெளியீடு (பத்திரிகைகள், வார இதழ்களில் பகிரங்கமாக வெளியிடப்பட்ட) | 03 |
| 3.2.2 இணைப்பாட புத்தகங்கள் வெளியீடு | 02 |

4. தகவல் தொழில்நுட்ப தேர்ச்சி (அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட சான்றிதழுக்கு மட்டும் புள்ளிகள் உரித்தாகும்.) — உச்ச புள்ளிகள் 10

| | |
|---|---|
| 4.1 6 மாதங்கள் அல்லது அதற்கு அதிகமான தகவல் தொழில் நுட்ப பாடநெறிக்காக | 05 |
| 4.2 1 வருடம் அல்லது 1 வருடத் துக்கு அதிகமான தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாவுக்காக | 10 |

5. மொழித் தேர்ச்சி (அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட சான்றிதழுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப் படும்.) — உச்ச புள்ளிகள் 10

ஆங்கில மொழி :

| | |
|---|---|
| 5.1 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆங்கில மொழி டிப்ளோமாவுக்கு | 05 |
| 5.2 1 வருடம் அல்லது அதற்கு அதிகமான கால ஆங்கில மொழி டிப்ளோமாவுக்கு | 10 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

6-261

---

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

### உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு நேரடி ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் மேற்குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து (ஆண்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை :**

2.1 மேற்குறித்த போட்டிப் பரீட்சைக்கான எழுத்துப் பரீட்சையை 2015 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரமே நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதோடு, பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

2.2 பூர்த்தியாக்கப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2.3 பொதுமக்களின் நன்மை கருதி வெற்றிடங்களைப் பூர்த்தியாக்கத் தேவையில்லை என அரச சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்தால் இப்பரீட்சையைப் பிற்போட அல்லது இரத்துச் செய்ய முடியும்.

3. **தகைமைகள் :**

3.1 ***கல்வித் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் அல்லது பட்டங்களை வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ;

3.2 ***உடற் தகைமைகள் :***

3.2.1 இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்று வதற்கும் பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவ தற்குமுரிய போதிய உடல் மற்றும் உளத் தகுதியுடையவ ராக இருத்தல் வேண்டும் ;

3.2.2 உயரம் 5 அடி 6 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

3.2.3 பார்வை தொடர்பான தேவைகள்.- மூக்குக்கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் இன்றி கண் பார்வை மட்டமானது ஆகக்குறைந்தது 6/6 மற்றும் 6/12 இற்கு இடையிலும் நிறப் பார்வையானது சாதாரணமாகவும் இருத்தல் வேண்டும்.

3.3 ***ஏனைய தகைமைகள் :***

3.3.1 இலங்கைப் பிரசையாதல் வேண்டும் ;

3.3.2 விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கம் உடையவ ராக இருத்தல் வேண்டும் ;

3.3.3 விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாக ரத்துப் பெற்றவர்கள் மற்றும் தபுதாரர்கள் விவாக மானவர்களாகக் கருதப்படுவர்) ;

3.3.4 இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்று வதற்கு கட்டுப்படுதல் வேண்டும் ;

3.3.5 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான 3.1 முதல் 3.4.2 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அத்தகைமைகளை சகல வழிகளிலும் பூர்த்திசெய் திருத்தல் வேண்டும் ;

3.4 ***வயது :***

3.4.1 ஆகக்குறைந்த வயதெல்லை 22 வயது ;

3.4.2 ஆகக்கூடிய வயதெல்லை 28 வயது. (பொலிஸ் கடமையில் ஈடுபட்டுள்ள, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ நிறுவனமொன்றில் பட்டம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான வயதெல்லை 30 வயதாகும்.)

4. **நியமன அதிகாரி**.- அரச சேவைகள் ஆணைக்குழு.

5. **சேவை வகை தொடர்பான விபரங்கள்** :

5.1 **சேவை வகை**.- நிறைவேற்றுத் தரத்திலான சேவை வகை ;

5.2 **கையளிக்கப்படும் பணிகள் தொடர்பான பொது வரைவிலக்கணம்**.- சட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் சமாதானத்தைப் பேணல், சட்டமன்றத்தினால் விதிக்கப்படும் சட்டங்கள் மற்றும் கட்டளைகளை அமுல்படுத்துதல், நீதிமன்ற பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல், முகாமைத்துவ மற்றும் பொது மக்களுக்கு நட்புறவுடனான பொலிஸ் சேவையின் அபிமானத்தைப் பேணல் மற்றும் பாதுகாப்புப் பணிகளை நிறைவேற்றுதல் ;

5.3 பணிகளைக் கையளித்தல்: வகிக்கும் பதவிக்குரிய பணிகள் கையளிக்கப்படும்.

6. **பதவியின் தன்மை**.- நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

7. **சம்பளம்** :

7.1 சம்பள குறியீட்டு இலக்கம்.- எஸ்எல்1-2006

7.2 சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 22,935-10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53.555.

**குறிப்பு**.- உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் சம்பள முறையின் ஆரம்ப சம்பளப் படிமுறையில் வைக்கப்படுவர். சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொள்வதன் அடிப்படையில் சம்பள முறையிலேயே தொடர்ச்சியாக சம்பள ஏற்றங்கள் வழங்கப்படும்.

8. **நியமனத்திற்கான நிபந்தனைகள்** :

8.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

9. **சேவை நிபந்தனைகள்** :

9.1 நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட காலத்தைப் பயிலுநர் காலமாக கொள்ளல் வேண்டும் ;

9.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக தற்போது ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் எதிர்வரும் காலத்திலும் அது தொடர்பாக ஆக்கப்படும் ஏதேனும் விதிகளுக்கும் அமைய செயற்படுதல் வேண்டும் ;

9.3 தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள், அரச நிர்வாக சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், திணைக்கள சுற்றறிக்கைகள், திணைக்களக் கையேடுகள் மற்றும் ஆலோசனைக் கோவைகளின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும் ;

9.4 நியமனத் திகதியிலிருந்து முதல் 3 வருடங்கள் பயிலுநர் காலமாக அமுல்படுத்தப்படுவதோடு, அக்காலப்பகுதியினுள் உத்தியோகத்தருக்கு திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. அக்காலப் பகுதியினுள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் மாத்திரமே திருமணம் செய்ய முடியும். இவ்விதியை மீறினால் நியமனம் இரத்துச்செய்யப்படும் ;

9.5 நேரடி ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நியமிக்கப்பட்ட திகதி முதல் 3 வருட காலம் பயிலுநர் காலமாக பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்ற வேண்டியதோடு, இப்பயிலுநர் காலம் பூர்த்தியாவதற்கு முன்னர் உத்தியோகத்தர் ஒருவர் பதவியிலிருந்து விலக விரும்பினால் அவரின் பயிற்சி மற்றும் சீருடை உட்பட எனைய செலவுகளுக்காகவும் விதிக்கப்படும் ஏதேனும் தொகை இருப்பின் அவையனைத்தையும் இராஜினாமா கடிதத்தை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்திலேயே செலுத்துவதற்கு விருப்பத்தைத் தெரிவிக்கும் உடன்படிக்கையொன்றில் அவர்கள் கையொப்பமிடல் வேண்டும். இராஜினாமா தொடர்பாக தாபன விதிக்கோவை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் ;

9.6 நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையோர் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அனைத்துக் கடன்களையும் செலுத்தி முடித்திருத்தல் வேண்டும் ;

9.7 நேரடி ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்த உடனே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்படி, பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை இலக்கம் 1693/2003 மற்றும் 1804/2004 இற்கு அமைய பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையின்படி செயற்படுவதாக உறுதியுரை/சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

10. அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளில் காணப்படும் பொது நிபந்தனைகளுக்கு புறம்பான நிபந்தனைகள் :

10.1 அனைத்து விண்ணப்பதாரிகளும் அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளில் காணப்படும் பொது நிபந்தனைகள், தாபன விதிக்கோவையின் முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதிகளில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் அதற்குப் புறம்பான சுற்றறிக்கைகள் மற்றும் நிபந்தனைகள், பொலிஸ் திணைக்களத்தின் கட்டளைகள், பொலிஸ் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், அரச நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு கட்டுப்படுகின்றனர்.

10.2 அனைத்து நியமனங்கள் தொடர்பிலும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகளில் காணப்படும் நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

11. **ஆட்சேர்ப்பு முறை**.- திறந்த போட்டிப் பரீட்சையினதும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். முதலில் திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். திறந்த போட்டிப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்திபெற்ற விண்ணப்பதாரிகளிடையே ஆட்சேர்ப்புச் செய்வதற்குரிய எண்ணிக்கையைப் போன்று ஐந்து மடங்கு விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அவ்வாறு போதிய எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் திறந்த போட்டிப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையுடன் திறமை அடிப்படையில் மற்றும் பின்னணி பரிசீலனையின்போது

சிறந்த அறிக்கையுடைய விண்ணப்பதாரிகள் மற்றும் மருத்துவ பரிசோதனையைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

11.1 **திறந்த போட்டிப் பரீட்சை :**

11.1.1 பரீட்சையின் பெயர்.- உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு நேரடி ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

11.1.2 பரீட்சை தொடர்பான விபரங்கள் :

| தொடர் இலக்கம் | வினாப் பத்திரம்/ பாடத் துறை | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி அடையத் தேவை யான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | நுண் ணறிவு | 1 மணித் தியாலம் | 100 | 40% |
| 2 | பொது அறிவு | 1 மணித் தியாலம் | 100 | 40% |
| 3 | மொழித் தேர்ச்சி | 2 மணித் தியாலம் | 100 | 40% |

11.1.3 பரீட்சையை நடாத்தும் அதிகாரி.- பரீட்சை ஆணையாளர் நாயகம்

11.1.4 பரீட்சைக்குரிய பாடத்திட்டம் :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவு | 50 வினாக்கள் வழங்கப்படும். பல்தேர்வு வடிவிலானதும் சிறு வினா வடிவிலானதுமான அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| பொது அறிவு | 50 வினாக்கள் வழங்கப்படும். பல்தேர்வு வடிவிலானதும் சிறு வினா வடிவிலானதுமான அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| மொழித் தேர்ச்சி | வாக்கியம், கட்டுரை, சாராம்சம், வழங்கப்பட்ட பந்தியை வாசித்து விடையளித்தல், வழங்கப்பட்டுள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்து எழுதுதல் முதலானவற்றினாலானது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

11.1.5 பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

11.1.5.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நடாத்தப்படும்.

11.1.5.2 பரீட்சார்த்தி ஒருவர், தகைமை பெற்ற பரீட்சையில் சித்தி பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

11.1.5.3 பரீட்சார்த்தி ஒருவர், தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை இரண்டு மொழிகளில் அல்லது ஆகக்கூடிய மொழிகளில் சித்தி பெற்றிருந்தால், அப்பரீட்சையில் அவர் சித்தி பெற்ற பாடங்களில் கூடியவற்றிற்குத் தோற்றிய மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

11.1.5.4 பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், மேலதிக பாடத்தை வேறொரு மொழியிலும் சித்தி பெற்றுள்ள விசேட பட்டமொன்றுடைய பரீட்சார்த்தி ஒருவர் பிரதான பாடத்தில் சித்தி பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேற்குறித்த 11.1.5.2 முதல் 11.1.5.4 வரை காணப்படும் தகைமையுடைய பரீட்சை என்ற பதம் மூலம் 11.1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சையே கருதப்படுகிறது.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியிலேயே பதில் அளித்தல் வேண்டும்.

(iii) தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படாது.

11.2 **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மொழித் தேர்ச்சி | 10 |
| 3. கணினி தொடர்பான திறன் | 05 |
| 4. விளையாட்டுத் திறமை | 20 |
| 5. தலைமைத்துவம்/ பொதுச் சேவைகள் | 20 |
| 6. நேர்முகப் பரீட்சைக் குழுவின் மதிப்பீடு | 20 |
| மொத்தம் | 100 |

11.2.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் சந்தர்ப்பத்திலேயே தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

11.2.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளுடன் திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் சேர்க்கப்பட்டு பரீட்சார்த்தி பெற்ற மொத்தப் புள்ளிகள் தீர்மானிக்கப்படும்.

11.2.3 அரச சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி இறுதி முடிவுகள் விண்ணப்பதாரர்களுக்கு பிரத்தியேகமாக அறிவிக்கப்படும்.

12. **பின்னணி பரிசீலனை :**

12.1 மேற்குறித்தவாறு ஆட்சேர்ப்பதற்காக தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் தொடர்பில் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக பின்னணி பரிசீலனை நடாத்தப்படும்.

**குறிப்பு**.- நெருங்கிய உறவினர்கள் தொடர்பில் எந்தவிதமான கடுமையான குற்றங்களும் அறிக்கையிடப்பட்டிருத்தலாகாது.

12.2 பரீட்சார்த்தியின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக அவரினதும் அவரின் நெருங்கிய உறவினர்களினதும் அவர் நெருங்கிப் பழகுபவர்களினதும் நன்னடத்தை மற்றும் நடத்தை தொடர்பாக பரிசீலனை செய்யப்படுவதோடு துர்நடத்தை பின்னணி பரிசீலனை அறிக்கையுடைய பரீட்சார்த்திகள் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியின் தாய், தந்தை, பாதுகாவலர்கள், சகோதர, சகோதரிகள் ஆகியோர் நெருங்கிய உறவினர்களாகக் கருதப்படுவர்.

12.3 ஆட்சேர்ப்புச் செய்யப்படும்போது பரீட்சார்த்திகள் பொய்யான தகவல்களை வழங்குதலானது அவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகைமையற்றவராக்கும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டமை வெளிப்பட்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நியமனம் முடிவுறுத்தப்படும்.

13. **மருத்துவ பரிசோதனை :**

13.1 மருத்துவ பரிசோதனைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பொலிஸ் வைத்தியசாலையில் பிரதான வைத்தியரினால் நடாத்தப்படும் மருத்துவ பரிசோதனையில் சித்திபெறுதல் வேண்டும். மேலும் இதன் போது பரீட்சார்த்திகள் பொலிஸ் கடமைகளுக்குப் பொருத்தமான உடல் மற்றும் உள பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். பிரதான வைத்தியர், மருத்துவ பரிசோதனை அறிக்கைகளை சுகாதார திணைக்களத்தின் 169 ஆம் பொதுப் படிவத்தின்கீழ் சமர்ப்பித்தல் வேண்டும். மருத்துவ பரிசோதனையை ஒரு தடவை மாத்திரமே மேற்கொள்ளலாம்.

14. **பயிற்சிக்கான அழைப்பு**.- நேரடி ஆட்சேர்ப்பின் பின்னணி பரிசீலனையிலும் மருத்துவ பரிசோதனையிலும் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளிடையே திறன்கள் குறித்த ஆவணத்தின் பிரகாரம் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளவர்கள் அனுமதிக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கையின்படி பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படுகின்ற நாளொன்றில் பயிற்சிக்காக அழைக்கப்படுவர். இப்பயிற்சியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியிலும் தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்திலும் மற்றும் பிரதேச மட்டத்திலும் வழங்கப்படும்.

தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களுககு ஆரம்ப சேவைப் பயிற்சியொன்று வழங்கப்படும். குதிரைச் சவாரியும் பயிற்சியில் உள்ளடங்கும்.

15. **விண்ணப்பிக்கும் முறை :**

15.1 விண்ணப்பப்படிவமானது, இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய இருத்தல் வேண்டும் என்பதோடு, தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ4 அளவிலான இரண்டு தாள்களில் தயாரித்து பரீட்சார்த்திகளே அதனைப் பூரணப்படுத்தல் வேண்டும். 1-8 வரையிலான தலைப்புக்கள் தாளின் முதற்பக்கத்திலும், 9-14 வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் 15 முதல் முடிவு வரையான தலைப்புகள் இறுதிப்பக்கத்திலும் உள்ளடங்குமாறு தனது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாகக் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

15.2 பரீட்சார்த்தி பரீட்சையில் தோற்றவிருக்கும் மொழியில் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும்.

15.3 பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 2015.08.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில், "பணிப்பாளர், பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இலக்கம் 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 6" எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

15.4 எல்லாவிதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலின் போது விண்ணப்பப்படிவங்கள் தொலைதல் அல்லது தாமதமாதல் தொடர்பிலான எந்தவொரு முறையீடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

16. **கட்டணம் :**

16.1 அனுமதிக் கட்டணம் 1,000 ரூபாவாகும்.

16.2 இக்கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்ற ஆலோசனையுடன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் நாட்டிலுள்ள எந்தவொரு தபால்/ உப தபால் நிலையத்திலும் பணமாக மாத்திரம் செலுத்தல் வேண்டும். தபால்/ உப தபால் நிலையத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினதும் பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதியை வைத்திருத்தல் பயனுடையதாகும்.

16.3 இக்கட்டணமானது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீள செலுத்தப்படமாட்டாது.

17. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் :**

17.1 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது.

17.2 இவ்விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதோடு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரி தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி பரீட்சை நிலைய அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

17.3 தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறு ஒரு பரீட்சை நிலையத்திலும் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

17.4 அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அது குறித்து அறிவித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சைத் தினத்திற்கு குறைந்தது 5 நாட்களுக்கு முன்னர் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பு நகரிற்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதிகளைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, கோரல் கடிதமொன்றை அறிவித்தலில் உள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரித்தலானது மிகப் பயனுடையதாக அமையும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலைச் சான்றுப்படுத்துவதன் பொருட்டு தன் வசமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி மற்றும் விண்ணப் பத்தைப் பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்துக்கொள்ளலும் பயனுடையதாகும்.

17.5 பரீட்சைக்காக அனுமதி அட்டையை வழங்கலானது தகைமைகளை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படாது.

18. **விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :**

18.1 தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பங்களை, அவர்களது திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பாக அவ்வாறு செய்வதற்கு அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரே சான்றுப்படுத்தல் வேண்டும்.

18.2 ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை அவ்வாறு செய்வதற்கு அதிகாரமுடைய ஒருவரே சான்றுப்படுத்தல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச பாடசாலையொன்றின் அதிபர், கடற்படை, வான்படை, மற்றும் இராணுவப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் அல்லது 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலதிகமான தொகையை வருடாந்த திரட்டியச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரச உத்தியோகத்தர் ஒருவராதல் வேண்டும்.

19. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்.**- விண்ணப்பதாரி தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையத்தில் நிலைய அதிபர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

20. **பிழையான தகவல்களை வழங்குவது தொடர்பான தண்டனைகள்.**- இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளின் பிரகாரம், விண்ணப்பதாரியொருவர் அப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது அதற்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் அவரது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் பிழைகள் இருப்பது தெரியவரின் அல்லது அவரால் வேண்டுமென்றே ஏதேனுமோர் முக்கியமான தகவல் மறைக்கப்பட்டிருந்தால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

21. **ஆவணங்கள்.**- பின்வரும் மூல ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுமிடத்து விண்ணப்பதாரி அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

21.1 பிறப்புச் சான்றிதழ் (பாடசாலைகளின் பாவனைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது ஞானஸ்நான சான்றிதழ் இதன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படாது.);

21.2 கல்வித் தகைமைகள் மற்றும் பிரயோக அனுபவம் தொடர்பான சான்றிதழ்;

21.3 பாடசாலைகளில் பெற்றுக்கொண்ட சான்றிதழ்களும் உட்பட 4 நற்சான்றிதழ் பத்திரங்களுக்கு மேற்படாத எண்ணிக்கை, அச்சான்றிதழ்களுள் குறைந்தது ஒரு சான்றிதழாவது தமது கல்வி போதனாசிரியரிடமிருந்தோ அல்லது பேராசிரியரிடமிருந்தோ பெற்றுக்கொண்டதாயிருத்தல் வேண்டும்;

21.4 வதிவைச் சான்றுப்படுத்துவதற்கு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட 6 மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ்.

*22. **சட்ட விரோத நன்கொடைகள்**.-* விண்ணப்பதாரியொருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு வகையிலேனும் சட்டவிரோத நன்கொடைகளைப் கொடுப்பதற்கு அல்லது அழுத்தம் கொடுக்க முயற்சி செய்தலானது அவ்விண்ணப்பதாரி தகைமையற்றவராவதற்கு காரணமாக அமையும்.

*23. **வினைத்திறன் காண் தடைப் பரீட்சை** :*

23.1 நேரடி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோர் பதவியில் நியமிக்கப் பட்டு 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் எழுத்துமூல, வாய்மூல மற்றும் செயல்முறை வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி பெறல் வேண்டும்.

*24. **மொழித் தேர்ச்சி** :*

24.1 ***அரச கரும மொழி**.-* அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் பொது நிர்வாக சுற்றுநிருபம் 01/2014 மற்றும் அதனுடன் தொடர் புள்ள ஏனைய சுற்றுநிருபங்களுக்குரிய மொழித் தேர்ச்சியைப் பயிலுநர் காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

24.2 ***பிற அரச கரும மொழி**.-* பொது நிர்வாக சுற்றுநிருபம் 07/2007 மற்றும் அதனுடன் தொடர்புள்ள ஏனைய சுற்று நிருபங்களுக்கு அமைய உரிய மட்டத்திற்கான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

25. இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுப்பைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமோர் விடயமிருப்பின் அது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

26. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலின் கருத்துக்களிடையே ஏதாவது பொருந்தாத தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமாயின் அவ்வேளையில் சிங்கள மொழி மூல அறிவித்தலின் பிரகாரமே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் மா அதிபர்,
பொலிஸ் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
2015.05.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

***உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015***

Open Competitive Examination for Direct Recruitment to the Post of Assistant Superintendent of Police of the Sri Lanka Police Department - 2015

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்.)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி முதலெழுத்துக் களுடனான பெயர் :----.
(ஆங்கில பேரெழுத்துக்களில்) :----.
(உ-ம் : PERERA, A.B.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி :-

2.1 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) :----.
2.3 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. 3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-
[ | | | | | | | | | ]

3.2 வழங்கப்பட்ட திகதி :
[ | | | ] [ | ] [ | ]

4. ஆண்/பெண் :-
ஆண்-0
பெண்-1 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

6. 2015.08.13 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : [ | | | ] மாதங்கள் : [ | ] நாட்கள்: [ | ]

7. தேசிய இனம் :-
(சிங்களவர்-2, இலங்கைத் தமிழர்-3, இந்திய தமிழர்-4, முஸ்லிம்-5, வேறு-6) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

8. குடியியல் நிலை :-
(விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

9. வதிவிடம் சம்பந்தமான விபரங்கள் :

9.1 நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் பிரிவு :----.
9.2 நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :----.
9.3 நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு :----.
9.4 அலுவலக முகவரி (ஏற்புடையதாயின் மாத்திரம்) :----.

10. 10.1 பட்டம் பெற்ற திகதி :----.
10.2 பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
10.3 பதிவு இலக்கமும் திகதியும் :----.
10.4 வெளிவாரி/உள்வாரி :----.

10.5 பட்டம் :----.
(பட்ட சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.)
10.6 பாடங்கள் :----.
10.7 வகுப்பு :----.
10.8 உயர்/கீழ் :----.
10.9 பரீட்சை இலக்கம் :----.
10.10 பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

11. உடற் தகைமை :

உயரம் : ----, அடி ----, அங்குலம்

12. நீங்கள் தற்போது பொலிஸ் உத்தியோகத்தராக பதவி வகிக்கின்றீர்களா ? :----. அவ்வாறாயின் தற்போது வகிக்கும் பதவி மற்றும் நியமனம் பெற்ற திகதியைக் குறிப்பிடவும் :----.

13. பணப் பற்றுச்சீட்டினை நன்றாக ஒட்டவும். பணப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருக்கவும் :

| பற்றுச்சீட்டினை கழராதவாறு இங்கே ஒட்டவும் |
|---|

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை என்பதையும், ............................... தபால்/உப தபால் அலுவலகத்தில் கட்டணம் செலுத்திய .......................... ஆம் இலக்க மற்றும் .......................... ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படவும், இப்பரீட்சை குறித்த நிபந்தனைகளுக்கு அமைய நான் தகைமையற்றவர் எனத் தெரியவரின், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகையிலோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச் செய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப் படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**: (வர்த்தமானி அறிவித்தலின் 18 ஆவது பந்தியின் பிரகாரமாதல் வேண்டும்.)
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவரது கையொப்பத்தை ................. ஆந் திகதியன்று என் முன்னிலையில் இட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும் அப்பணப் பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

16. திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் (ஏற்புடையதாயின் மாத்திரம்) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவை புரிகிறார் எனவும் அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியு மெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

6-265

---

## அரச சேவைகள் ஆணைக்குழு

மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவை வகையைச் சார்ந்த III ஆம் தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான கீழ்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் வெற்றிடங்களுக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 6 இல் குறிப்பிட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள்** :-

(i) ***கல்வி/ தொழிற் தகைமைகள்***.- இலங்கை உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய் திருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்;

(ii) ***அனுபவங்கள்***.- இலங்கை உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணி யாக சத்தியப்பிரமாணம் செய்திருப்பதோடு 3 வருடத்திற்குக் குறையாத செயற்திறனான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்;

(iii) ***உடற் தகைமைகள்***.- அனைத்து பரீட்சார்த்திகளும் இலங்கை யில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமையாற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iv) ஏனையவை :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

* விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் சகல விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

* க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தும் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இந்நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது, விதவைகள் தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்தல் வேண்டும் ;

(ii) நியமனம் 3 வருட தகுதிகூர் காலத்திற்கு ஏற்புடையதாகும். சட்ட உத்தியோகத்தர் III ஆவது தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து 3 வருடத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டுள்ளபடி முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி 07/2007 ஆம் இலக்கம் கொண்ட மற்றும் அதற்கு இணையான அரச கரும மொழி தொடர்பாக குறித்த மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும் ;

(iv) இந்நியமனமானது அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் மற்றும் தாபனவிதிக் கோவையின் சட்ட திட்டங்களுக்கு அமைவானது.

4. **வயதெல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரி 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 1,78,1050 - ரூ. 53,555 மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்தானது. (2006.04.25 ஆந் திகதியிலான அ. நிர். சு. இல. 6/2006 இன் SLI-2006 இலக்கம் கொண்ட சம்பளத் தொகுதி).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான கீழ்வரும் புள்ளிகள் நடைமுறையானது அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| | |
|---|---|
| * மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| * மேலதிக தொழிற் தகைமைகள் | 15 |
| * மேலதிக அனுபவங்கள் | 30 (ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள்) |

(தொழிற் தகைமைகளின்கீழ் சட்டத்தரணி ஒருவராகத் தேவைப்படும் குறைந்தபட்சம் 3 வருட சேவைக் காலத்திற்கு மேலதிகமாக).

| | |
|---|---|
| * ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 |
| * கணினி ஆற்றல், தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு | 15 |
| * நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

7. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே தோற்ற முடியும்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்துச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் உரிய முறையில் சான்றுறுதிப்படுத்திய பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் அடையாளப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பங்கள் 2015.07.12 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

ஆணையாளர் நாயகம்,
மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்,
த. பெ. இல. 533,
இல. 341, எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 5.

(ஆ) விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் ஏ4 கடதாசியில் முதல் பக்கத்தில் 1 முதல் 9 வரையான பந்திகளும், 2 ஆவது பக்கத்தில் 10 முதல் 15 வரையான பந்திகளும் வரத்தக்கவாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரராலேயே விண்ணப்பங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரச பாடசாலை அதிபரினால்/சமாதான நீதவான் ஒருவரினால்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரபல நொத்தாரிசு ஒருவர்/முப்படை அதிகாரமுடைய அதிகாரி ஒருவர் அல்லது ரூ. 22,935 இற்குக் குறையாத இணைந்த சேவைச் சம்பளம் பெறும் அரச நிரந்தரப் பதவியிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றும் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(உ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாதுவிடின் நிராகரிக்கப்படும்.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- தங்களால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பத்தில் ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறு என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் அறியவருமாயின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் அறியவருமாயின் அதற்கான நடைமுறைகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதற்குரிய தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவிற்குரியது.

இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களிடையே எவையேனும் இணக்கமின்மைகள் காணப்பட்டால் சிங்கள அறிவித்தலின் விடயங்கள் சரியானவை எனக் கருதி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
உள்ளக போக்குவரத்து அமைச்சு.

உள்ளக போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**

சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான (தரம் III) திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1\. 1.1 முதலெழுத்துக்களுடன் கடைசிப்பெயர் (ஆங்கில தனிப் பேரெழுத்துக்களில்) :----.
உதாரணம் (பெரேரா N.B)
1.2 முழுப்பெயர் (ஆங்கில தனிப் பேரெழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2\. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில் தனிப் பேரெழுத்துக்களில்) : ----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அலுவலக முகவரி (ஆங்கில தனிப் பேரெழுத்துக்களில்) : ----.

3\. ஆண்/பெண் : (ஆண்-0, பெண்-1)
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)

4\. விவாகமானவரா /விவாகமாகாதவரா என்பது :
(திருமணமானவர்-1, திருமணமாகாதவர்-2)
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)

5\. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

6\. 6.1 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

6.2 விண்ணப்பம் அனுப்பும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7\. தொலைபேசி :

8\. 8.1 உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஆண்டு :----.
8.2 விண்ணப்பம் அனுப்பும் இறுதித் திகதியன்று சட்டத்தரணியாக இருந்த அனுபவம் :
ஆண்டு :----.

9\. 9.1 சட்டவியல் பட்டம் பெறப்பட்ட ஆண்டு :----.
9.2 பல்கலைக்கழகம் :----.
9.3 சித்தியடைந்த தரம்/வகுப்பு :----.
9.4 மேலதிக கல்வித் தகைமைகள் :----.
9.5 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கான சித்தி :----.

10\. 10.1 ஆங்கில மொழித் தேர்ச்சி :----.
10.2 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு :----.

11\. நீர் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக இருந்துள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரம் :----.

12\. நீர் இதற்கு முன்னர் அரச சேவையிலிருக்கும்போது சேவையை முடிவுறுத்துள்ளீரா ? :----.

அவ்வாறாயின் அது தொடர்பான விபரம் :----.

13\. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானது எனவும் சரியானவை எனவும் இங்கு உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிட்டுள்ள ஏதேனும் தகவலொன்று பொய்யானது எனவும், தவறானது எனவும் தெரிவுசெய்வதற்கு முன்பு அறிய வருமாயின், அக்காரணத்தினால் நான் இப்பதவிக்கு தகைமையற்றவராகவும், இப்பதவிக்கு நான் நியமனம் பெற்ற பின்னர் அத்தவறு அறியவருமாயின் எந்தவொரு இழப்பீட்டுத் தொகையும் செலுத்தப்படாது என்னை சேவையிலிருந்து நீக்க முடியும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14\. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- (வர்த்தமானி அறிவித்தலின் 8 ஆவது பந்தியின் (ஈ) இன்படி இருத்தல் வேண்டும்.)

விண்ணப்பதாரி .................................... (முழுப்பெயர்) என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும், .............................. ஆம் மாதம் ................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயரும் பதவியும் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை கட்டாயமானது) :----.

15\. **அரசாங்க ஊழியராயின் திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றுரை :**

இப்பரீட்சார்த்தியாகிய ...................................... திரு./திருமதி/செல்வி இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/மாகாண சபையில்/

நிறுவனத்தில் நிரந்தர/ அமய/ தற்காலிக உத்தியோகத்தராக கடமையாற்றுகிறார் என்பதையும், இப்பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால், அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரமுடைய உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை கட்டாயமானது) :----.

6-377

---

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு)

### பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

1. **பதவி.- பேராசிரியர் (பதவி 1) :**

(i) வயதெல்லை.- 55 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும் ;

(ii) கல்வித் தகைமை :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள் ளப்பட்ட சமூகப் பணி/சமூக விஞ்ஞானப் பாடங்களில் முதற்தர சித்தி அல்லது 2 ஆம் தர (உயர்) சித்தியுடன் கூடிய பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சமூகப் பணி/ சமூக விஞ்ஞானப் பாடங்களல் தரச்சித்தி இல்லாத பட்டத்துடன் சமூகப்பணி, சமூக/ நலன்புரி, சமூகக் கொள்கை, உளவளத்துணை, சமூக/சமுதாய அபிவிருத்தி ஆகிய பாடங்களில் அல்லது துறைகளோடு தொடர்புபட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப் பட்ட/ குறைந்தது ஒரு வருட காலத்திற்கு குறையாத முதுமானி பட்டம் ;

அத்துடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் சமூகப் பணி அல்லது சமூக விஞ்ஞானங்களில் கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல் (சமூகப்பணி கலாநிதிப் பட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும்);

அத்துடன்

குறித்த கலாநிதி பட்டம் பெற்றதன் பின்னர் பல்கலைக்கழக மட்டத்தில் விரிவுரை மேற் கொண்டிருத்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் குறைந்தது 10 வருட அனுபவத்துடன் கல்வி நிருவாகத்தில் போதிய அனுபவம் பெற்றிருத்தல் ;

அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 10 வருட சேவைக்கால அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வருட காலத்திற்கு குறையாத கலைமானி படட்டதினை பெற்றிருத்தல்

மற்றும்

ஆங்கில மொழியில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- HM2-3-2006
ரூபா 47,245 - 12 x 1,310 - 62,965 ரூபா (மாதம்)

2. **பதவி.- சிரேஷ்ட விரிவுரையாளர் (பதவிகள் 4) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) கல்வித் தகைமை.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூகப் பணியில் (Social Work) கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) அனுபவம்.- அரச அல்லது அரசினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி கற்றல் மற்றும் கற்பித்தல் துறைகளில் அனுபவ மிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் 2-2006ஏ
ரூபா 34,550 - 10 x 925 - 43,880 ரூபா (மாதம்)

3. **பதவி.- சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் (பதவிகள் 3) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் கலைமானிப் பட்டத்தினையும் சமூக விஞ்ஞானப் பாடத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் பயிற்சித் துறையில் அனுபவ மிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூக விஞ்ஞானத்தில் முதுமாணி பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்கம் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்ட நிறுவனம் ஒன்றில் 15 வருடத்திற்கு குறையாமல் சமூகப் பணி பயிற்சிப் பிரிவில் அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் 2-2006ஏ
ரூபா 34,550 - 10 x 925 - 43,880 ரூபா (மாதம்)

**குறிப்பு**.- உளவியல்சார் உளவளத்துறையில் ஒரு வருடத்துக்குக் குறையாத பட்டப்பின் படிப்பினை அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியினைப் பெற்றிருப்பது விசேட தகுதியாகக் கருதப்படும்.

**4. பதவி.- சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் (பதவிகள் 3) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங் களில் கலைமாணிப் பட்டத்தினையும் சமூக விஞ்ஞான பாடத்தில் கலாநிதி பட்டத்தினையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவமிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் இளமாணிப் பட்டத்துடன் சமூக விஞ்ஞானத்தில் முதுமாணி பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 15 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவமிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் 2-2006ஏ
ரூபா 34,550 - 10 x 925 - 43,880 ரூபா (மாதம்)

**5. பதவி.- விரிவுரையாளர் II (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம்/உயர் கல்வி நிறுவனமொன்றில் இருந்து சமூகப்பணி (Social Work) பற்றிய முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர்ந்த தர) சித்தியுடனான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞான பாடங்களில் பெறப்பட்ட முதலாம் பட்டத்துடன் சமூகப் பணியில் (Social Work) பற்றிய பட்டநிலை பின் படிப்புப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் 1-2006ஏ
ரூபா 24,725 - 5 x 550 - 5 x 645 - 15 x 770 - 42,250 ரூபா (மாதம்)

**6. பதவி.- ஆங்கில போதனாசிரியர் III (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கிலப் பாடத்தை உள்ளடக்கியதாக பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால்

பெறப்பட்ட ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் மற்றும் ஆங்கில மொழியைக் கற்பிக்கும் முறை உள்ளடங்கிய பட்டம்.

அத்துடன்

(இ) ஆங்கில மொழியைக் கற்பித்தல் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஈ) ஆங்கில மொழியைக் கற்பித்தல் தொடர்பான அரச பாடசாலை ஒன்றில் அல்லது ஏனைய அரச உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 4-2006ஏ
ரூபா 18,230 - 10 X 365 - 15 X 450 - 5 X 550 - 31,380 ரூபா (மாதம்)

7. **பதவி.- பணிப்பாளர் (நிர்வாகமும் நிதியும் - (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 25 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நிர்வாகம் அல்லது முகாமை பற்றிய முதலாம் பட்டத்துடன் நிர்வாகம் அல்லது முகாமை பற்றிய பட்டநிலை பின் படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) அரசாங்க சேவையில், நியதிச்சட்டச் சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் நிர்வாகம் மற்றும் நிதிசார் பணிகள் தொடர்பாக குறைந்தபட்சம் 15 வருடங்கள் சேவையாற்றி முகாமையாளர் மட்டத்திலான அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எச்எம் 1-3-2006
ரூபா 41,745 - 15 X 1,100 - 58,245 ரூபா (மாதம்)

8. **பதவி.- கணக்காளர் - (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-
பட்டயக் கணக்காளர் உரிமச் சான்றிதழுடன் உரிய துறையில் 5 வருட கால பின் நிலைப் படிப்பு தலைமை அனுபவம் ;

அல்லது

CIMA/ACCA, AB தொகுதிகள் மற்றும் பகுதி I

அல்லது

கணக்கியல் (HNDA)/வர்த்தகம் பற்றிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் (HNDC/ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட வர்த்தகமானிப் பட்டம் அல்லது அதை யொத்த தகைமைகளுடன் உரிய துறையில் குறைந்த பட்சம் 5 வருட கால சேவை அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்எம் 1-1-2006
ரூபா 25,640 - 3 X 665 - 7 X 735 - 15 X 925 - 46,655 ரூபா (மாதம்)

9. **பதவி.- நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நிலையப் பொறுப்பாளர்) - (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட இளமாணி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில் சமூகப்பணி, உளவளத் துணை அல்லது சமூக அபிவிருத்தித் துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலத்தைக் கொண்ட டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நிலையப் பொறுப்பாளர்) பதவியில் ஒரு வருடத்திலும் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 3-2006ஏ
ரூபா 15,600 - 10 X 215 - 4 X 240 - 15 X 320 - 7 X 320 - 26,030 ரூபா (மாதம்)

10. **பதவி.- மொழிபெயர்ப்பாளர் III (சிங்களம், ஆங்கிலம்) (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு

அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்கள/ ஆங்கில மொழிமூலம் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் சிங்களம் மற்றும் ஆங்கிலம்/ ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தி பெற்றிருத்தலும் சிங்களம்/ ஆங்கில மொழிபெயர்ப்பு தொடர்பான திறன் இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட நிறுவனமொன்றில் சிங்களம்/ ஆங்கில மொழிபெயர்ப்பாளராக 2 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 4-2006ஏ
ரூபா 18,230 - 10 x 365 - 15 x 450 - 5 x 550 - 31,380 ரூபா (மாதம்)

11. பதவி.- **கட்புல செவிப்புல நுட்பவியலாளர் (பதவி 1)** :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம், கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங்களுக்கு விசேட சித்தியுடன் ஒரே தரத்தில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான பாடத்துறையில் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்வியைத் தொடர்வதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல்.

(இ) தொழில்நுட்ப திறன்/ ஆற்றல்.- ஒவ்வொரு பதவிக்கு மான கடமைகள் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற்திறன் தகைமையில் (NVQ) ஐந்தாம் (5) தரத்திற்கு குறையாத செவிப்புல கட்புல தொழில்நுட்ப பாடநெறி யொன்றினை வெற்றிகரமாகப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 2-2-2006ஏ
ரூபா 14,610 - 10 x 145 - 7 x 170 - 4 x 290 - 20 x 345 - ரூபா 25,310 (மாதம்)

மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :

(i) பதவி நிரந்தரமானது ;
(ii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(iii) மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.

**குறிப்பு**.- இப்பதவி வெற்றிடங்கள் நாவலை, ராஜகிரியவில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திலேயே காணப்படுவதுடன் இந்நிறுவனத்திற்கு கிளைகள் இல்லை. தெரிவாகும் விண்ணப்பதாரிகள் பின்வரும் விலாசத்தில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் மாத்திரம் பணிபுரிதல் வேண்டும்.

பணிப்பாளர் (நிர்வாகம், மற்றும் நிதி) பதவிக்காக நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் , கணக்காளர் பதவிக்காக அந்த சேவையின் உத்தியோகத்தர்களுக்கும் இணைப்பு அடிப்படையை மையமாகக் கொண்டு விண்ணப்பிக்க முடியும்.

**சேவை நிபந்தனைகள்**.- 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2015.07.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

கலாநிதி ரிட்லி ஜயசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
இராஜகிரிய.
2015, மே 28.

6-385

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## II ஆம் தரத்திலுள்ள கிராம அலுவலர்களை I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

கிராம அலுவலர் சேவைக்குரிய கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள II ஆம் தரத்தின் கிராம அலுவலர்களை அச்சேவையின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படுகின்ற திகதியில் அவரால் நடாத்தப்படுகின்ற எழுத்து மூலமான பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், பரீட்சார்த்திகள் கிராம அலுவலர் சேவையின் I ஆம் தரத்தின் தரமுயர்வுக்காகத் தெரிவுசெய்யப்படு வார்கள். அதன்போது எழுத்து மூலமான பரீட்சையில் உரிய அனைத்துப் பாடங்களிலும் ஆகக்குறைந்தது 40% அல்லது அதற்கு மேலதிகமான புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுடன், தரமுயர்த்தும் அதிகாரியான என்னால் தீர்மானிக்கப்படுகின்ற திகதி தொடக்கம் தரமுயர்வுகள்

வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படும். அத்திகதியில் அலுவலர் சேவையில் இல்லாதுவிடின் அத்தரமுயர்விற்கான உரிமை காணப்பட மாட்டாது. உப அட்டவணையில் இலக்கம் 1 இல் நகர மட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களது எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும் மத்திய நிலையங்கள் பெயரிடப்படும்.

3. **மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை நடைமுறைகள்**.- பரீட்சார்த்திகள் கீழே காட்டப்பட்டுள்ள பாடங்களுக்குத் தோற்றுதல் வேண்டும் :

(1) பொது விவேகம் (1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(2) தொழில்சார் அறிவு (1 1/2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

4. **பாடத்திட்டம்** :

(1) **பொது விவேகம்**.- பரீட்சார்த்தியினது எண் அறிவு மற்றும் மொழி ஆற்றல் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், தர்க்க ரீதியான ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் உள்ளடங்கலாக பொது விவேகத்தை அளவிடக்கூடிய விதத்தில் தயாரிக்கப் பட்ட பல்வினாக்கள் மற்றும் சுருக்கமான விடையளிக்கும் மாதிரியில் அமைந்த 50 வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.

(2) **தொழில்சார் அறிவு**.- விடய ஆய்வுடனான குறுகிய வினாக்களைக் கொண்டதும் கீழே காட்டப்பட்டுள்ள இரண்டு பகுதிகளைக் கொண்டு அமைந்துள்ளதுமான வினாத் தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும் :

பகுதி I :

சட்டபூர்வமான செயற்பாடுகள்.- அலுவலக முறைமைகள் மற்றும் நிருவாகம் மற்றும் உரிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பான அறிவுடன் தொடர்புடைய வினாத்தாளாகும். அரச நிதி தொடர்பான பொறுப்புக்கள், தினக்குறிப்பேடு, மதிப்பீட்டு நடவடிக்கைகள், தனி நபர்களைப் பதிவு செய்யும் சட்டம், 1980 ஆம் ஆண்டின் **44** ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவுசெய்யும் சட்டம், அரச காணிகளைப் பாதுகாக்கும் சட்டங்கள், அரச காணிகளை எடுக்கும் சட்டங்கள், சூழல் பாதுகாப்புச் சட்டங்கள், வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புத் தொடர்பான சட்டதிட்டங்கள், வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டங்கள், முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் ஒப்படைக்கப்படும் கடமைப் பொறுப்புக்கள், மலைநாட்டு விவாக, விவாகரத்துச் சட்டம், மீன்பிடி மற்றும் வர்த்தகப் பாதுகாப்புக்கள், பிரதேச சபைச் சட்டங்கள், விவசாய சேவைகள் சட்டம், தொல்பொருள் பாதுகாப்பு, நீர்ப்பாசனச் சட்டம் ஆகிய சட்டங்கள் மற்றும் அதற்குள் உள்ளடக்கப்படும் விதிமுறைகளின் கீழ் கிராம அலுவலர்களுக்குரிய பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் தொடர்பான அறிவு மதிப்பிடப்படும்.

பகுதி II :

சட்டபூர்வமான செயற்பாடுகள்.- பொது மக்கள் தொடர்புகள், அபிவிருத்தி நிருவாகம், அபிவிருத்தி மாற்றங்களுக்கான நடவடிக்கைகள், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சிகள், கிராமிய அபிவிருத்தி திட்டமிடல், பிரதேச மட்டத்தில் நிருவாகத்தில் செய்யப்படுகின்ற பிரதான மாற்றங்கள், சூழல் மாசடைதல் மற்றும் அதன் தாக்கங்களும் விளைவுகளும், அரசின் ஏற்றுமதி செயற்பாடுகள், கிராமிய சேவைகளது சாராம்சம் ஆகிய விடயங்கள் தொடர்பாக கிராம அலுவலரது அறிவு பரிசீலிக்கப்படும்.

5. **தகைமைகள்** :

(i) 2006.01.01 ஆந் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் சேவையின் தரம் II இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட அல்லது உள்ளீர்க்கப்பட்ட ஒரு அலுவலராக இருத்தல்.

(ii) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியில் கிராம அலுவலர் சேவையின் II ஆம் தரத்தில் 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல். (II ஆம் தரத்தின் 10 வருட சேவைக் காலத்திற்குள் சமுர்த்தி/ விவசாய அலுவலர்/ விவசாய விரிவாக்கற் சேவையாளர்/ விசேட அலுவலர்/ பயிர்ச்செய்கை அலுவலராக சேவையில் இருந்து கிராம அலுவலர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட ஒருவராயின் முன்னைய சேவையின் நிரந்தர சேவைக்காலமும் உள்ள டக்கப்படும். அவ்வாறே அரசியல் காரணங்களால் 1977 ஆம் ஆண்டில் தொழிலை இழந்து இலக்கம் அமப/ 97/ 0419/ 05/ 016 ஐக் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 1995 இல் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட அலுவலர்களது சேவைக்காலமானது 1977 ஆம் ஆண்டில் முதல் நியமனம் பெற்ற திகதியிலிருந்து கணக்கிடப்படும்.)

(iii) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு உடன் முன்னராக 5 வருட திருப்திகரமான சேவைக்காலம் காணப்படுதல்.

(iv) அன்றைய திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் சேவையின் அனுமதிக்கப்பட்ட நடைமுறை விதிகளுக்கமைய வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்/ விடுவிக்கப்பட்டிருத்தல்.

**குறிப்பு**.- II ஆம் தரத்தில் வினைத்திறன்காண் தடைக்கு அப்பால் செல்லுதலானது, சம்பள படிநிலை கருத்திற்கொள்ளப்படாது, பத்து வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த II ஆம் தரத்தின் கிராம அலுவலர்களது திருப்திகரமான வேலை, நடத்தை, வரவு ஆகிய விடயங்கள் தொடர்பாக அவர்கள் சேவையாற்றுகின்ற பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரால் வழங்கப்படுகின்ற சான்றிதழின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

6. **சம்பள அளவுத் திட்டம்** :

(i) கிராம அலுவலர் சேவையின் I ஆம் தரத்திற்காக.- மாதாந்தம் ரூ. 17,550-5X240-14X320-ரூ. 23,230 (2010.09.29 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில்)

(ii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/ 2006 (iii) (iv) இல் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் திருத்தங்களுக்கும் அமைவாக, தரமுயர்வு பெறும் அலுவலர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்தின் உரிய சம்பளப் படிநிலையில் வைக்கப்படுவார்கள்.

7. **பரீட்சை நடைமுறைகள் :**

(i) கிராம அலுவலர் சேவைக்கு இணைவதற்கான பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலேயே விண்ணப்பதாரர்கள் வினாத் தாள்கள் இரண்டிற்கும் விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள், தாம் கல்வி பயின்ற மொழி மூலத்திலோ அல்லது சிங்கள மொழியிலோ அல்லது தமிழ் மொழியிலோ, ஆனால் இரண்டு வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். உங்களால் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப் பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக மட்டுமே விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை ஏ4 கடதாசியில் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 5 வரை முதல் பக்கத்திலும் மிகுதிப் பகுதிகளை ஏனைய பக்கங்களிலும் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் தட்டச்சு/கணனி மூலம் தயாரிக்கப்பட முடியுமென்பதுடன் இங்கு காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய சரியாகவும் தெளிவாகவும் தமது கையெழுத்தில் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்பத்திரத்தில் சிங்களத்திற்குப் புறம்பாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்பத்திரங்களில் தமிழ் மொழிக்குப் புறம்பாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) அலுவலரது அலுவலக முகவரிக்குப் புறம்பாக அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும். இம்முகவரியானது விண்ணப்பதாரர்களுக்கு தாமதமின்றி அனுமதிப்பத்திரங்களை அனுப்பி வைப்ப தற்காக மட்டுமே கோரப்படுகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். தரமுயர்வுகளை வழங்கும்போது அம்முகவரியானது எந்தவிதத்திலும் உபயோகப்படாது என்பது தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது.

8. **விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளுதல்**.- விண்ணப்பப் பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். ஒரு பிரதியை தமது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக பிரதேச செயலாளருக்கும், மற்றைய பிரதியை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கும் கீழே காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அனுப்புதல் வேண்டும் :

(i) அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது விண்ணப்பப் பத்திரங்களைத் தாம் வேலை செய்யும் கிராம அலுவலர் பிரிவிற்குரிய பிரதேச செயலாளரது விதப்புரைகளுடன் ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு'' என்ற முகவரிக்கு தபாலில் 2015, யூலை 3 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''II ஆம் தரத்திலுள்ள கிராம அலுவலர்களை I ஆம் தரத்திற்கு உயர்த்தும் மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட்சை - 2015'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களும் பூரணமற்ற விண்ணப்பப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- முதலாவது தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் பரீட்சைக் கட்டணம் செலுத்துவ திலிருந்து விலக்களிக்கப்படுவதுடன் மற்றைய விண்ணப்பதாரர் களுக்கான பரீட்சைக் கட்டணம் 300 ரூபா ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 203-02-13 இன் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் நிலையங்களிலும் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய கூட்டுக்குள் அதன் ஓரத்தை ஒட்டி பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் தபால் நிலையம் என்பனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியொன்றை தம்மிடம் வைத்திருத்தல் பயனுடையதாகும். எந்தவொரு காரணத்தினாலும் இக்கட்டணமானது மீளச் செலுத்தப்படாதென்பதுடன் இந்தப் பரீட்சைக் கட்டணத்தினை எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப் படும்.

10. **பரீட்சைக்கு உட்படுத்தல் :**

(i) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் (உரியதென்றால் மட்டும்) சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது அனுமதிப் பத்திரங்களை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும். தமது பரீட்சை அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டார்.

(ii) அனைத்துப் பரீட்சார்த்திகளும் அரச வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற பரீட்சை சட்டதிட்டங்கள் தொடர்பாக விளக்கத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைப் பின்பற்றுவதற்கும் உட்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்பட வேண்டி வரும். இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத இவ்விடயத்துடன் தொடர்புடைய எந்தவொரு விடயம் தொடர்பிலும் எனது தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை உடைய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற விதத்தில் திணைக்களத் தலைவரால் கடமை விடுமுறை

வழங்கப்படும். பிரயாணச் செலவுகள் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.

12. **அடையாள அட்டை.**- பரீட்சார்த்திகளால் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் மண்டபப் பொறுப்பாளர் அத்தாட்சிப்படுத்திக்கொள்ளக்கூடிய விதத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களுள் எவையும் பொறுப்பேற்கப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

13. விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதன் காரணமாக அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் எனக் கருதுதல் கூடாது. விண்ணப்ப தாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் அதனைக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரம் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காதுவிடின், அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட உங்களது கோரிக்கைக் கடிதத்தைக் கீழே காட்டப்பட்டுள்ள விபரங்களுடன் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின்க பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினது பிரதி மற்றும் விண்ணப்பப்பத்திரத்தைப் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் அருகில் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

கீழே காட்டப்பட்டுள்ள தகவல்களையும் உங்களிடம் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும் :-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(3) முகவரி ;
(4) தபால் நிலையம், பதிவுத் தபால் இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி ;
(5) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் நிலையம் ;
(6) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி.

14. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப் படுகின்ற இவ்வறிவித்தலின் பந்திகளில் ஏதேனும் பொருத்தமின்மை காணப்படுமாயின், பிழை காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப் பங்களில் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் சரியானது எனக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2015, வைகாசி 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## II ஆம் தரத்திலுள்ள கிராம அலுவலர்களை I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

## Limited Competitive Examination for the Promotion of Grade II Grama Niladharies to Grade I - 2015

(இலக்கம் 1 தொடக்கம் 5 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 6 தொடக்கம் ஏனையவற்றை ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்குக.)

[ ]
(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. முதலாவது தெரிவு | |
| 2. இரண்டாவது தெரிவு | |

(அட்டவணை இலக்கம் 1 ஐப் பார்க்கவும்)

பகுதி I

(**கவனிக்க.**- விண்ணப்பப்படிவத்தைச் சரியாகவும் தெளிவாகவும் பூரணப்படுத்துக.)

1. (i) (அ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதியாக இடுகின்ற பெயரை முன்னராகவும் மற்றைய பெயர்களது முதலெழுத்துக்களைப் பின்னராகவும் இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(உதா : GUNAWARDHANA, H. M. S. K.)

(ii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. (i) அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(ii) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) ஆண்/பெண் :
பெண் - 1
ஆண் - 0

[ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

4. (i) தற்போது சேவையாற்றும் பிரதேச செயலகப் பிரிவு :----.

(ii) தற்போது சேவையாற்றும் கிராம அலுவலர் பிரிவு-

இலக்கம் :

5. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

6. தற்போது வகிக்கும் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி/ உள்ளீர்க்கப்பட்ட அலுவலரெனின் அது தொடர்பான விபரங்கள் (உரிய பகுதியை மட்டும் பூரணப்படுத்துக.) :----.

| | உள்ளடக்கப் பட்டிருந்த சேவை | உள்ளடக்கப்பட்ட திகதி | சேவைக் காலம் |
|---|---|---|---|
| (அ) | விசேட சேவை அலுவலர் | ...................... | .............. |
| (ஆ) | பயிர்ச்செய்கை அலுவலர் சேவை | ...................... | .............. |
| (இ) | விவசாய விரிவாக்கற் சேவை | ...................... | .............. |
| (ஈ) | சமுர்த்தி அல்லது விவசாய வழிகாட்டுநர் சேவை | ...................... | .............. |

7. (i) சேவைக்காலத்தில் அனைத்து சம்பளவேற்றங்களும் உழைத்துப் பெறப்பட்டுள்ளதா ? :----.
(ii) அவ்வாறில்லாதுவிடின் விபரங்களைக் குறிப்பிடுக :----.

8. கூட்டுத்தாபனமொன்றுக்கு அல்லது வேறு சேவைகளுக்குத் தற்போது நீர் விடுவிக்கப்பட்டிருந்தால் அது தொடர்பான விபரங்களைத் தருக :----.

9. நீர் வெளிநாட்டு வேலைக்காகவோ அல்லது வேறு விடயமாகவோ சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டிருந்தால் விபரங்களைத் தருக :----.

10. உமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? : ----.

அது தொடர்பான விபரங்களைத் தருக :----.

11. **கவனித்தல் வேண்டும்.**- வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளபடி பரீட்சைக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்டதாக தபால் அலுவலகத்தினால் பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு கழன்று போகாத விதத்தில் ஒட்டப்படுதல் வேண்டும் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால் அலுவலகம் :----.
பணம் (ரூபா) :----.
திகதி :----.

.................................. ஆகிய என்னால், 1-11 வரை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையெனவும் சரியெனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானது எனக் கண்டுபிடிக்கப்பட்டால் இச்சேவையின் I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்படுதல் தொடர்பாக எனக்குள்ள உரிமையை இல்லாது செய்து, எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும் என்பதை நான் நன்கு அறிவேன் எனவும், அதன் அடிப்படையில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக நான் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டேன் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற அனைத்து சட்டதிட்டங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என வெளிப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

## பகுதி II

பிரதேச செயலாளரினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(i) திரு./திருமதி/செல்வி ......................................... மேலே வழங்கிய தகவல்கள் சரியானது என்றும் உண்மையானது என்றும், அது அவரது தனிப்பட்ட கோவையுடன் ஒப்புநோக்கப்பட்டதுடன் அவை சரியானது எனவும்,

(ii) அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும்,

(iii) உடன் முன்னரான 5 வருட காலப்பகுதியில் அவரது சேவை திருப்திகரமாக அமைந்தது எனவும், ............................ ஆந் திகதி தொடக்கம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் தரமுயர்த்தப் பட்டுள்ளதெனவும்/ விடுவிக்கப்பட்டுள்ளதெனவும் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தின் பிரதியொன்று அலுவலரின் தனிப்பட்ட கோவையில் இணைக்கப்பட்டுள்ள தெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(iv) விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், பற்றுச்சீட்டினை உரிய கூட்டில் ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பிரதேச செயலாளர்.

பெயர் :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.
(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்.)

**அட்டவணை இலக்கம் 1**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருணாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

6-259

**கல்வி அமைச்சு**

*இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சை - 2015*

*இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும்.*

*2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1999, மாச்சு 11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

*உத்தியோகத்தர் ஒருவருக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது தனித்தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.*

***பாடவிதானம் :***

| *விடய இல.* | *பாடம்* | *புள்ளி* | *காலம்* |
|---|---|---|---|
| *1* | **பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் :** *அரச தாபனக்கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் தாபன விதிக்கோவையின் சட்டம்* | *100* | *1 1/2 மணித்தியாலம்* |
| *2* | **நிதி ஒழுங்குக் கோவை :** *அரச நிதி ஒழுங்குக் கோவையின் முதலாவது பிரிவின் i, ii, v, viii, xii மற்றும் xiv வாசகங்களுக்கு விசேட கவனத்துடன்* | *100* | *1 1/2 மணித்தியாலம்* |
| *3* | ***கல்விச் சட்டம் :*** *பரீட்சார்த்திகளிடம் கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது-* | *100* | *2 மணித்தியாலம்* |

(i) *1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டக் கோவைகள்.*

(ii) *1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டம்.*

(iii) *1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டம்.*

(iv) *1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சை (மறுசீரமைப்பு)ச் சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்.*

(v) *1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்.*

(vi) *1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வித்தாபனச் சட்டம்.*

(vii) *1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிச் சட்டம்.*

(viii) *1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கல்வி ஆணைக்குழுச் சபைச் சட்டம்.*

(ix) *1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபைச் சட்டம்.*

(x) *13 ஆவது மறுசீரமைப்பு மற்றும் அடிப்படை உரிமை தொடர்பான 3 ஆவது வாசகத்துக்கு விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் யாப்பு.*

(xi) *கல்விக்குரியதான மாகாண சபையினால் விதிக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

***குறிப்பு.***- *பரீட்சார்த்திகளினால் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெறவேண்டும்.*

*3.* ***பரீட்சையின் மொழிமூலம்.***- (i) *இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.*

(ii) போட்டிப் பரீட்சை மூலம் அரச சேவையில் இணைந்துகொண்ட பரீட்சார்த்தியாயின் பரீட்சையின் மொழி மூலமாக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலமும், போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்துகொண்ட பரீட்சார்த்தியாயின் இப்பரீட்சையின் மொழி மூலமாக அரச சேவைக்குப் பிரவேசிக்கத் தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. பரீட்சார்த்தி தமக்கு உரிமையற்ற மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாகத் தெரியவருமிடத்து அவர் பரீட்சார்த்தி நிலையிலிருந்து நீக்கப்படுவார்.

5. விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சகல தலைப்புக்களும் முதலாம் பக்கத்தில் அமையக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் வினவ வேண்டியதுடன் அவ்வாறு இல்லாதபட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவேண்டும்.

6. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்ற பரீட்சார்த்தி பொறுப்பாக இருக்க வேண்டும்.

7. விண்ணப்பப்படிவம் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை" எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

8. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டபடி விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் தினத்துக்கு குறைந்தது 3 நாட்களுக்கு முன் அனுமதி அட்டை கிடைக்காதபட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட நிழற்படப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் தொலைநகல் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாக அமையும்.

9. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

10. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது நிறுவனமொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஆயின் அவரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை பரீட்சைத் தினத்தன்று மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்த விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளங்களை உறுதிசெய்வதற்காக சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் எதனையும் சமர்ப்பிக்க முடியும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை,

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை வழங்குவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பூரண தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருத முடியாது.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

(அ) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடமிருந்து முழுமையான பரீட்சைக் கட்டணம் அல்லது பகுதிக்காக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களின் கீழ்க்குறிப்பிடப்பட்டதற்கமைவாகப் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும்.

| | | ரூபா |
|---|---|---|
| மொத்தப் பரீட்சைக் கட்டணம் | - | 500 |
| ஒரு பாடத்திற்கு | - | 200 |

பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் அரசின் வருமானத்தில் வைப்பிடக்கூடியவாறு நாட்டின் எந்தவொரு தபால்/உப தபால் நிலையங்களிலும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெறும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சைக் கட்டணத்துக்காக காசுக் கட்டளையோ, முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதோடு பரீட்சைக்காக செலுத்தும் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

14. பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களதும் பெறுபேற்று சான்றிதழ்கள் "செயலாளர், கல்வி அமைச்சு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்" மூலம் வழங்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழி விடயத்தில் ஏதும் பொருந்தாத நிலை காணப்படின் அப்பொழுது சிங்கள மொழி மூல அறிவித்தலையே சரியானதாகக் கொண்டு செயற்படுதல் வேண்டும்.

16. இந்தப் பரீட்சை அறிவித்தலின் மூலம் குறிப்பிடப்படாத ஏதும் நியதிகள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

உபாலி மாரசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2015, வைகாசி 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆந் தர வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சை – 2015
(Efficiency Bar Examination in Class 2 Grade II of Sri Lanka Teacher Educators' Service – 2015)

(விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்ற விலாசத்திற்கு நிறுவனத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.)
(பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடவும்)

1. (அ) முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் பெரிய எழுத்தில்) :-----.
உ-ம் : Mr./Mrs./Miss GUNAWARDHANA, M. G. B. S. K

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கிலக் பெரிய எழுத்தில்) :-----.

2. பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3. (i) பதவிப் பெயர் :-----.
(ii) சேவையாற்றும் கல்விக் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி/ஆசிரிய மத்திய நிலைய முகவரி :-----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

4. சொந்த முகவரி (ஆங்கிலக் பெரிய எழுத்தில்) :-----.

5. அறிவித்தலின் 2 ஆம் வாசகம் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

6. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதிக்குத் தோற்றியுள்ளாரா ? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றிய ஆண்டு, மொழிமூலத்தைக் குறிப்பிடவும் :-

| பாடங்கள் | ஆண்டு | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

7. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-

| பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். |
|---|

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும், வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை உண்டு என்பதை தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்பட இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்.

(1) இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதிபெற்றவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

(2) பரீட்சார்த்தி உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியதாகவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும் சான்றுபடுத்துகிறேன்.

.......................................................
பீடாதிபதி/ஆசிரிய மத்திய நிலையப்
பொறுப்பாளரின் கையொப்பம்.

திகதி :-----.

6-390

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.